# காஞ்சிபுரம் மாநகராட்சி
# கூட்ட எண்.1/2022-2023

**2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ம் தேதி திங்கள் கிழமை (பிலவ வருடம்) திருவள்ளுவர் ஆண்டு -2053 காலை 11.00 மணிக்கு இம்மாமன்ற பேறிஞர் அண்ணா மாளிகை கூட்டரங்கில் நடக்க உள்ள அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

## முன்னிலை
## திருமதி. மூ. மகாலட்சுமி, பி.இ. எம்.பி.ஏ.,
## மாமன்ற மேயர்

### 1. மாமன்ற மேயர் அவர்களால் கொண்டுவரப்படும் நன்றி அறிவிப்பு தீர்மானம்

திராவிடம் என்றாலே பெண் உரிமை. பெண்ணிற்கு சம உரிமை. பெண்ணிற்கு முன்னுரிமை என படிப்படியாக பெண்களின் உரிமையை காப்பதிலும், பெண்களுக்கு பதவி அளித்து அழகு பார்ப்பதிலும், திராவிட முன்னேற்ற கழகத்தின் சிறப்பான செயல்பாடு என்பதே அனைவரும் அறிந்தவகையில் முதல் பெண் மருத்துவர் **டாக்டர். முத்துலட்சுமி**, முதல் பெண் சமுக ஆர்வலர் **மூவளூர் இராமாமிர்தம்மாள்,** முதல் பெண் அமைச்சர் **திருமதி. சத்தியவாணி முத்து** என பெண்களுக்கு முதலில் வாய்ப்பளித்தது திராவிட முன்னேற்ற கழகமே. அவ்வகையில். திராவிட இயக்கத்தில் **பெரியார்** முதல் காஞ்சி மண்ணின் மைந்தனும் உலகம் போற்றும் அறிஞரும் திராவிட முன்னேற்ற கழக நிறுவனருமான **பேரறிஞர் அண்ணா** அவர்கள் காட்டிய வழியில் கழகத்தை 50 ஆண்டு காலம் சிறப்பாக வழி நடத்தி பெண்களுக்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியவரும், பெண்களுக்கு சம உரிமை சட்டத்தினை அளித்தவருமான திராவிட இயக்கத்தின் சிறந்த தலைவராக அனைவர் உள்ளத்திலும் நீங்கா இடம் பெற்றிருக்க கூடிய **முத்தமிழறிஞர் தலைவர் டாக்டர். கலைஞர்** அவர்கள் வழியில் வாரிசாக அல்ல மாறாக செயல் திறனால் தலைவர் **கலைஞருக்கு** பின் கழகத்தை கண்ணியமாக வழி நடத்தும் தலைவர் உலக மக்களே வியக்கும் வண்ணம் தொலைநோக்குப் பார்வையில் சிறந்த நிர்வாகத்தை தந்துகொண்டிருக்கும் முதல்வர் 50 ஆண்டு கட்சிப்பணியிலும் பொது நிர்வாகத்திலும் பெண்களுக்கு உயரிய மதிப்பளித்து அழகு பார்க்கும் **மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்களின், பெண்களுக்கு வாய்ப்பளிக்கும் உயரிய எண்ணத்தால் அரசியலில் என்னை ஆர்வம் கொள்ள செய்து **பேரறிஞர் அண்ணாவின்** காஞ்சி மாநகரை **மாநகராட்சியாக** தரம் உயர்த்தி என்னை **முதல் மேயராக** பதவியில் அமரவைத்து காஞ்சி மாநகர மக்களுக்கு சேவை செய்ய வாய்ப்பு அளித்துள்ளார். மாண்மிகு கழகத்தலைவர் முதல்வர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது குடும்பம் பாரம்பரியமிக்க திராவிட குடும்பம் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். எனது மாமனாரின் தந்தை மற்றும் தாய் காலம் சென்ற **திரு.எம்.குப்புசாமி**, **திருமதி.பி.ஞானசௌந்தரி** அவர்கள் திராவிட இயக்கத்தின் மீது கொண்ட பற்றுதல் காரணமாக இவர்களின் சுயமரியாதை திருமணம் 14.09.1951–ம் ஆண்டு செந்தமிழ்செல்வர் **திரு.சி.வி.எம். அண்ணாமலை** அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற திருமணம் இம்மாநகர் அறிந்த செய்தியாகும். மேலும் எனது கணவர் **திரு. அ.யுவராஜ்**, அவர்களின் தந்தையும் எனது மாமனாருமாகிய **திரு.அன்பழகன்** அவர்கள் காஞ்சிபுர நகர கூட்டறவு வங்கியின் இயக்குநராகவும், பொது மக்களுக்கு சேவையாற்றியுள்ளார். மேலும் அவரின் வாரிசு மற்றும் வழிதோன்றலாகிய எனது கணவர் **திரு.அ. யுவராஜ்** அவர்கள் சிறுவயது முதல் கழகத்தில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு கழகப்பணியாற்றி தற்போது திராவிட முன்னேற்ற கழக மாவட்ட இளைஞர் அணியின் துணை அமைப்பாளராக செயல் புரிந்துவருகிறார் என்பதை நன்கறிந்த, **திரு.க.சுந்தர் உத்திரமேரூர்** சட்டமன்ற உறுப்பினரும் மற்றும் மாவட்ட கழக செயலாளர் அவர்களின் பரிந்துரையுடன் கழகத்தலைவர் மாண்புமிகு **தமிழக முதல்வர்** அவர்கள் பாரம்பரியமிக்க கழக குடும்பத்தை சேர்ந்த எனக்கு இந்த வாய்ப்பை அளித்துள்ளார்கள்.

கழகம் என்மீது வைத்துள்ள நம்பிக்கையை காப்பாற்றும் வகையில் காஞ்சி மாநகரத்தை சீர்மிகு நகரமாக மாற்றுவதற்கு திராவிட ஆட்சி (Dravidian Model) செயல்பாடு முறையில் என்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டு தொண்டுயாற்றுவேன் என தெரிவித்துக்கொள்கிறேன்.

என் மீது நம்பிக்கைக்கொண்டு தலைமையின் உத்தரவிற்கு கட்டுப்பட்டு என்னை காஞ்சி மாநகர மேயராக தேர்வு செய்த அனைத்து சகோதர, சகோதரி கழக **மாமன்ற உறுப்பினர்களுக்கும்** மற்றும் தோழமை கட்சியினை சார்ந்த **மாமன்ற உறுப்பினர்கள்** அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் திராவிட முன்னேற்ற கழகத்தின் வெற்றிச் சின்னமான **உதய சூரியன்** சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான மாமன்ற உறுப்பினர்களை தேர்வு செய்த காஞ்சி மாநகர மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாநகராட்சியின் மாமன்ற முதல் பெண் மேயராக நான் பதவியேற்றுள்ள நிலையில் காஞ்சி மாநகர அனைத்து மக்களுக்கும், மாமன்றத்தினால் செய்யவேண்டிய அனைத்து சேவைகளிலும், மாநகர வளர்ச்சி பணிகளிலும் என்னை முழுமையாக அர்ப்பணித்து காஞ்சி மாநகர வளர்ச்சிக்கு பாடுபடுவேன் என உறுதி அளிக்கிறேன்.

**அலுவலக குறிப்பு** :–

மாமன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண். 1 பதிவு செய்யப்பட்டது.**

2. சுற்றப்புற சூழலை (Environmentol) மேம்படுத்திடும் பொருட்டு உலக வெப்பமயமாதலை (Bio Warming) தவிர்த்திடும் பொருட்டும் பொது மக்கள் நெகிழியினை (Plastic) பயன்படுத்துவதை அறவே தவிர்த்திட கைத்தறி மற்றும் கதராலான துணியினை கொண்டு மீண்டும் மஞ்சப்பை இயக்கத்தை துவக்கி வைத்து மக்கள் இயக்கமாக மாற்றி விழுப்புணர்வை ஏற்படுத்திட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு இம்மாமன்றம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

அலுவலக குறிப்பு :–

மாமன்றம் பதிவு செய்யலாம்

**தீர்மான எண். 2 பதிவு செய்யப்பட்டது.**

3. தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (**Floor rate i.e .Rate of Taxation**) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ருட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, மாநகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், மாநகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள மாநகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி மற்றும் காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

மாநகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி:</u>

## <u>குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building):</u>

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

## <u>குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :</u>

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது :**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு :**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் காஞ்சிபுரம் மாநகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண் | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின் கட்டணம் | 7.00 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 0.78 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | 4.87 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் (நிலுவைத் தொகை) | 1.65 |
| | **மொத்தம்** | **14.3** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், மாநகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், காஞ்சிபுரம் மாநகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. அரசாணை (நிலை) எண்.53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022–ன்படி மாமன்றம் பதிவு செய்யலாம்.

2. மேற்படி அரசாணையின் வழிகாட்டுதலின் படி சொத்துவரி பொது சீராய்வு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2923/2022/அ1)**

**தீர்மான எண். 3 பதிவு செய்யப்பட்டது.**
**அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

4. அரசாணை என்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றின்படி இம்மாநகராட்சி எல்லையில் அமைந்துள்ள இதுநாள் வரை மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள் மற்றும் சந்துகள் ஆகியவற்றுக்கு கீழ்கண்டவாறு மண்டலம் நிர்ணம் செய்யப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | தற்பொழுது நிர்ணயம் செய்யப்படும் மண்டலம் |
|---|---|---|---|
| 1 | 23 | கே.டி.எஸ் மணி தெரு | A |
| 2 | 23 | பாரதிதாசன் தெரு | A |
| 3 | 23 | ஓட்டகூத்தர் தெரு | A |
| 4 | 23 | மகேந்திர பல்லவன் தெரு | A |
| 5 | 49 | சுதர்சன் நகர் | A |
| 6 | 49 | சுரவணா நகர் | A |
| 7 | 31 | பாபுகான் தோட்டம் | A |
| 8 | 31 | அன்னை சாரதா அவென்யூ | A |
| 9 | 31 | முத்துசுவாமி அவென்யூ | A |
| 10 | 32 | மணிகேச அவென்யூ | A |
| 11 | 37 | T.K. நம்பி தெரு ராஜேஸ்வரி கார்டன் | A |
| 12 | 37 | ராஜேஸ்ரி கார்டன் | A |
| 13 | 51 | கல்யாணி அம்மன் தெரு அருணாசலம் நகர் | A |
| 14 | 51 | அன்னாம்மாள் தெரு அருணாசலம் நகர் | A |
| 15 | 51 | சுபிக்ஷம் அப்பார்ட்மெண்ட் ஜெம் நகர் | A |
| 16 | 51 | கதிர்வேல் குறுக்கு தெரு | A |
| 17 | 51 | எஸ்.கே. அப்பார்ட் விசாலாட்சி நகர் | A |
| 18 | 51 | அருணாசலம் நகர் விரிவு வடக்கு முதல் தெரு | A |
| 19 | 51 | அருணாசலம் நகர் விரிவு வடக்கு இரண்டாவது தெரு | A |
| 20 | 51 | அருணாசலம் நகர் விரிவு வடக்கு மூன்றாவது தெரு | A |
| 21 | 51 | ஓம் சிவம் சாலை ஜெம் நகர் | A |

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | தற்பொழுது நிர்ணயம் செய்யப்படும் மண்டலம் |
|---|---|---|---|
| 22 | 51 | அய்யப்பன் சாலை, சிவலிங்கா நகர் | A |
| 23 | 51 | ஓம் முருகா சாலை ஜெம் நகர் விரிவாக்கம் | A |
| 24 | 51 | ஓம் சக்தி சாலை ஜெம் நகர் விரிவாக்கம் | A |
| 25 | 51 | பாரதியார் சாலை ஜெம் நகர் விரிவாக்கம் | A |
| 26 | 51 | காமராஜர் சாலை, ஜெம் நகர் விரிவாக்கம் | A |
| 27 | 51 | துர்கையம்மன் சாலை ஜெம் நகர் விரிவாக்கம் | A |
| 28 | 51 | வைரம் சாலை ஜெம் நகர் விரிவாக்கம் | A |
| 29 | 51 | பன்னாரியம்மன் சாலை ஜெம் நகர் விரிவாக்கம் | A |
| 30 | 51 | சாரதம்பாள் சாலை ஜெம் நகர் விரிவாக்கம் | A |
| 31 | 51 | எஸ்.பி சாலை | A |
| 32 | 51 | என்.எஸ்.என் நகர் | A |
| 33 | 51 | கோதாவரி தெரு ஆஞ்சநேயர் அவென்யூ | A |
| 34 | 51 | சரளா சாலை ஆஞ்சநேயர் அவென்யூ | A |
| 35 | 51 | சரஸ்வதி தெரு ஆஞ்சநேயர் அவென்யூ | A |
| 36 | 51 | கிருஷ்ணா தெரு ஆஞ்சநேயர் அவென்யூ | A |
| 37 | 51 | கங்கை சாலை ஆஞ்சநேயர் அவென்யூ | A |
| 38 | 51 | ஸ்ரீ மா சண்முகா நகர் | A |
| 39 | 51 | மூகாம்பிகை  நகர் மெயின் ரோடு | A |
| 40 | 51 | இந்திரா அவென்யூ | A |
| 41 | 51 | ஸ்ரீமுத்தாரம்மன் நகர் | A |
| 42 | 51 | பாக்கியலட்சுமி நகர் | A |
| 43 | 51 | சின்னகுழந்தை தெரு அருணாசலம் நகர் | A |
| 44 | 51 | கந்தசாமி தெரு அருணாசலம் நகர் | A |
| 45 | 51 | ஏகாம்பரம் தெரு அருணாசலம் நகர் | A |
| 46 | 13 | சந்தியப்பன் நகர் | B |
| 47 | 14 | செங்குந்தர் நகர் பேஸ்–1 | B |
| 48 | 14 | செங்குந்தர் நகர் பேஸ்–2 | B |
| 49 | 14 | செங்குந்தர் நகர் பேஸ்–3 | B |
| 50 | 15 | பாரதி நகர் | B |
| 51 | 15 | ஏ.என்.ஆர் அவென்யூ | B |
| 52 | 16 | வன்னீஸ்வரர் தோட்டம் | B |
| 53 | 16 | முத்தீஸ்வரர் தோட்டம் | B |
| 54 | 20 | வணிகர் தெரு பாவாஜி நகர் | B |
| 55 | 30 | ரவிசங்கர் நகர் மற்றும் ரவிசங்கர் அவென்யூ | B |
| 56 | 30 | சுந்தரி அவென்யூ | B |
| 57 | 32 | வளத்தீஸ்வரன் கோயில் வடக்கு தெரு | B |
| 58 | 40 | கே.எஸ்.எம்  நகர் | B |

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | தற்பொழுது நிர்ணயம் செய்யப்படும் மண்டலம் |
|---|---|---|---|
| 59 | 40 | காமாட்சி நகர் | B |
| 60 | 40 | சுவர்ணபுரி அவென்யூ | B |
| 61 | 40 | சரவணா நகர் | B |
| 62 | 40 | சாஸ்திரி நகர் | B |
| 63 | 40 | கண்ணன் நகர் | B |
| 64 | 40 | திருசோலை பின் தெரு | B |
| 65 | 40 | பெருமாள் அவென்யூ | B |
| 66 | 45 | மாவட்ட ஆட்சியர் வளாகம் | B |
| 67 | 48 | காமராஜர் நகர் | B |
| 68 | 29 | காந்தி ரோடு இரும்பு கடை சந்து | B |
| 69 | 29 | காந்தி ரோடு தர்கா சந்து | B |
| 70 | 29 | காந்தி ரோடு மசூதி சந்து | B |
| 71 | 29 | வள்ளல் பச்சையப்பன் தெரு குட்டை மேடு | B |
| 72 | 24 | சொக்கம்மாள் நகர் | B |
| 73 | 24 | உப்புக்குளம் | B |
| 74 | 24 | காமகோடி அம்பாள் நகர் | B |
| 75 | 24 | காமாட்சி நகர் | B |
| 76 | 24 | பாக்ராபேட்டை விரிவு | B |
| 77 | 24 | குமரன் நகர் | B |
| 78 | 1 | ஒலி முகமதுபேட்டை ஹாஜி நகர் | C |
| 79 | 1 | ஒலி முகமதுபேட்டை வரதப்பன் பின் தெரு | C |
| 80 | 1 | ஒலி முகமதுபேட்டை வரதப்பன் தெரு அம்பாள் நகர் | C |
| 81 | 1 | ஒலி முகமதுபேட்டை தோப்பு தெரு | C |
| 82 | 6 | காலண்டர் தோப்பு தெரு | C |
| 83 | 7 | செட்டிக்குளம் என்.ஜி.ஓ நகர் | C |
| 84 | 8 | ராயங்குட்டை பள்ளத் தெரு | C |
| 85 | 12 | வெள்ள குளம் பெருமாள் நகர் | C |
| 86 | 12 | வெள்ளகுளம் வேதாச்சலம் நகர் | C |
| 87 | 12 | வெள்ளகுளம் தேவராஜ் நகர் | C |
| 88 | 13 | சந்தியப்பன் நகர் | C |
| 89 | 13 | முல்லை நகர் | C |
| 90 | 13 | திருகுமரன் நகர் | C |
| 91 | 13 | கைலாஷ் கார்டன் | C |
| 92 | 13 | எல்லப்பா அவென்யூ | C |
| 93 | 14 | திருவேங்கம்மன் தெரு வள்ளல் பாரி நகர் | C |
| 94 | 14 | திருவேங்கம்மன் தெரு அன்னை சந்தியா நகர் | C |
| 95 | 15 | கே.கே.நகர் | C |

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | தற்பொழுது நிர்ணயம் செய்யப்படும் மண்டலம் |
|---|---|---|---|
| 96 | 15 | விஜயலட்சுமி நகர் | C |
| 97 | 17 | தனலட்சுமி நகர் | C |
| 98 | 19 | வ.ஊ.சி தெரு கிழக்கு | C |
| 99 | 19 | வ.ஊ.சி தெரு மேற்கு | C |
| 100 | 22 | சேக்குபேட்டை சாவடி தெரு | C |
| 101 | 25 | விஜயகிராமணி தெரு | C |
| 102 | 25 | பானக்கார தெரு | C |
| 103 | 25 | கோபால் சாமி தோட்டம் தெரு | C |
| 104 | 25 | கோபால் சாமி தோட்டம் தெரு 1வது தெரு | C |
| 105 | 25 | கோபால் சாமி தோட்டம் தெரு 2வது தெரு | C |
| 106 | 25 | கோபால் சாமி தோட்டம் தெரு 3வது தெரு | C |
| 107 | 25 | கோபால் சாமி தோட்டம் தெரு 4வது தெரு | C |
| 108 | 25 | கோபால் சாமி தோட்டம் தெரு 5வது தெரு | C |
| 109 | 25 | ஜண்டா தெரு | C |
| 110 | 25 | வெங்கடேச பாளையம் தெரு | C |
| 111 | 25 | வெங்கடேச பாளையம் 1வது தெரு | C |
| 112 | 25 | வெங்கடேச பாளையம் 2வது தெரு | C |
| 113 | 25 | வெங்கடேச பாளையம் 3வது தெரு | C |
| 114 | 25 | வெங்கடேச பாளையம் 4வது தெரு | C |
| 115 | 26 | ஹரிஹந்த் அவென்யூ | C |
| 116 | 27 | மாவடி அம்மன் தெரு | C |
| 117 | 27 | வி.பி.சிங் தெரு | C |
| 118 | 27 | ஆசிரியர் நகர் | C |
| 119 | 27 | பொன்னு ரங்கம் அவென்யூ | C |
| 120 | 27 | சௌராஷ்ரா பின் தெரு | C |
| 121 | 28 | கன்னிகோயில் தெரு | C |
| 122 | 30 | அன்னை சத்தியா நகர் தாயார்குளம் தெரு | C |
| 123 | 30 | MGR நகர் தாயார்குளம் தெரு | C |
| 124 | 32 | வளத்தீஸ்வரன் கோயில் தோட்ட தெரு | C |
| 125 | 33 | ஜியர் நாராயண பாளையம் பின்புறம் | C |
| 126 | 36 | சாந்தாலீஸ்வரன் கோயில் தெரு – புதுவசந்தம் நகர் | C |
| 127 | 36 | சாந்தாலீஸ்வரன் கோயில் தெரு – ஸ்ரீநிதி அவென்யூ | C |
| 128 | 36 | சாந்தாலீஸ்வரன் கோயில் தெரு – ரமணா அவென்யூ | C |
| 129 | 37 | சேர்மன் வி.என் பெருமாள் தெரு – கே.வி.எம் நகர் | C |
| 130 | 39 | கிருஷ்ணசாமி நகர் | C |
| 131 | 39 | மோகன் அவென்யூ | C |

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | தற்பொழுது நிர்ணயம் செய்யப்படும் மண்டலம் |
|---|---|---|---|
| 132 | 39 | ஏழுமலை நகர் | C |
| 133 | 39 | ஸ்ரீராம் நகர் | C |
| 134 | 39 | குமரன் நகர் | C |
| 135 | 40 | அம்பாள் நகர் | C |
| 136 | 41 | பெரியதோட்டம் காந்தி நகர் | C |
| 137 | 41 | பெரியதோட்டம் ஆண்டாள் நகர் | C |
| 138 | 41 | வெங்கடேஸ்வரா நகர் | C |
| 139 | 41 | நத்தபேட்டை கமலம் நகர் | C |
| 140 | 41 | நத்தபேட்டை ராயல் நகர் | C |
| 141 | 41 | நத்தபேட்டை ஐஸ்வர்யா நகர் | C |
| 142 | 41 | நத்தபேட்டை பாலாமணி நகர் | C |
| 143 | 41 | நத்தபேட்டை மீனாட்சி நகர் | C |
| 144 | 41 | நத்தபேட்டை ஸ்ரீலஷ்மி நகர் | C |
| 145 | 41 | நத்தபேட்டை கோமதி நகர் | C |
| 146 | 41 | நத்தபேட்டை எம்.ஜி.ஆர் நகர் | C |
| 147 | 41 | நத்தபேட்டை ஸ்ரீராம் நகர் | C |
| 148 | 41 | நத்தபேட்டை அபிராமி நகர் | C |
| 149 | 41 | நத்தபேட்டை சாய்பாபா கார்டன் | C |
| 150 | 41 | நத்தபேட்டை அருண் நகர் | C |
| 151 | 41 | நத்தபேட்டை ஸ்ரீபிரசன்ன விநாயகர் நகர் | C |
| 152 | 41 | நத்தபேட்டை பூங்கா அவென்யூ | C |
| 153 | 41 | நத்தபேட்டை காஞ்சி காமாட்சி நகர் | C |
| 154 | 41 | நத்தபேட்டை சத்யா நகர் | C |
| 155 | 41 | நத்தபேட்டை ஸ்ரீராகவேந்திரா நகர் | C |
| 156 | 41 | நத்தபேட்டை பி.எம் அவென்யூ | C |
| 157 | 41 | நத்தபேட்டை ஸ்ரீ பரமேஸ்வரி நகர் | C |
| 158 | 41 | நத்தபேட்டை போதிதர்மர் நகர் | C |
| 159 | 41 | நத்தபேட்டை பாரதி நகர் | C |
| 160 | 41 | நசரத்பேட்டை ஸ்ரீமகாலட்சுமி நகர் | C |
| 161 | 41 | நசரத்பேட்டை மகாலட்சுமி நகர் | C |
| 162 | 41 | நசரத்பேட்டை ஸ்ரீசித்தி விநாயகர் நகர் | C |
| 163 | 41 | நசரத்பேட்டை கோவிந்தசாமி நகர் | C |
| 164 | 41 | நசரத்பேட்டை வெற்றிவேல் நகர் | C |
| 165 | 41 | முருகு நகர் விரிவாக்கம் | C |
| 166 | 41 | சுதர்சன் நகர் விரிவாக்கம் | C |
| 167 | 41 | மாணிக்கம் நகர் | C |
| 168 | 42 | தேனம்பாக்கம் ஸ்ரீபாலாஜி நகர் | C |
| 169 | 42 | ஜெய் மாருதி நகர் | C |
| 170 | 42 | கஜலட்சுமி நகர் | C |

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | தற்பொழுது நிர்ணயம் செய்யப்படும் மண்டலம் |
|---|---|---|---|
| 171 | 42 | நாகம்மாள் நகர் | C |
| 172 | 42 | சோழன் நகர் | C |
| 173 | 42 | ஹைடெக் சிட்டி அஞ்சூர் | C |
| 174 | 42 | காமாட்சி அவென்யூ | C |
| 175 | 42 | பாரதி நகர் | C |
| 176 | 43 | சத்ய பிரமோத் நகர் | C |
| 177 | 43 | ஸ்ரீவரதராஜ பெருமாள் கார்டன் | C |
| 178 | 43 | ஸ்ரீசுதர்தன் நகர் | C |
| 179 | 43 | ஸ்ரீசுதர்தன் நகர் விரிவாக்கம் | C |
| 180 | 43 | காசி ராம் நகர் | C |
| 181 | 43 | வாழ முனுசாமி நகர் | C |
| 182 | 43 | கே.எம்.அவென்யூ | C |
| 183 | 43 | ராஜேந்திர அவென்யூ | C |
| 184 | 43 | மொட்டைகுளம் | C |
| 185 | 43 | சக்ரதாழ்வார் நகர் | C |
| 186 | 43 | அனுமான் நகர் | C |
| 187 | 43 | ஆதிசங்கரர் நகர் | C |
| 188 | 43 | திருமலை நகர் | C |
| 189 | 43 | திருவள்ளுவர் நகர் | C |
| 190 | 44 | ஸ்ரீவெங்கடேஸ்வரா நகர் அமுதபடி பின் தெரு | C |
| 191 | 44 | சி.வி பூந்தோட்டம் | C |
| 192 | 44 | சேஷாத்திரி பாளையம் பழனி பின் தெரு | C |
| 193 | 45 | சுதர்சன் நகர் | C |
| 194 | 45 | எஸ்.கே திருவேங்கப்பன் நகர் | C |
| 195 | 45 | ராஜன் நகர் | C |
| 196 | 45 | கோல்டன் நகர் | C |
| 197 | 45 | மகாலட்சுமி நகர் | C |
| 198 | 45 | வ.ஊ.சி நகர் | C |
| 199 | 45 | ஏகாம்பரம் நகர் | C |
| 200 | 45 | குமரேசன் நகர் | C |
| 201 | 45 | கே.எஸ்.பி நகர் | C |
| 202 | 45 | திருவெங்கப்பம் அவென்யூ | C |
| 203 | 45 | ஸ்ரீநகர் | C |
| 204 | 45 | எஸ்.ஜி.எஸ் நகர் | C |
| 205 | 45 | கல்கிநகர் | C |
| 206 | 45 | சதாவரம் – பெருந்தலைவர் காமராஜர் நகர் | C |
| 207 | 45 | சதாவரம் – முனுசாமி நகர் | C |
| 208 | 45 | சதாவரம் – ஸ்ரீவரதராஜ பெருமாள் அவென்யூ | C |
| 209 | 45 | ஜெ.பி.ஆர் நகர் | C |

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | தற்பொழுது நிர்ணயம் செய்யப்படும் மண்டலம் |
|---|---|---|---|
| 210 | 45 | எம்.ஜி.ஆர் நகர் உத்திரமேரூர் ரோடு | C |
| 211 | 45 | பாலாஜி நகர் | C |
| 212 | 46 | ருக்மணி நகர் (கண்ணகிபுரம்) | C |
| 213 | 46 | ஸ்ரீஐஸ்வர்யம் நகர் | C |
| 214 | 46 | திருவேங்கிடம் நகர் | C |
| 215 | 46 | ஏ.எஸ் நகர் (சின்னஅய்யங்குளம்) | C |
| 216 | 46 | தயாநிதி நகர் (சின்ன அய்யங்குளம்) | C |
| 217 | 46 | ஆதித்யா நகர் (சின்ன அய்யங்குளம்) | C |
| 218 | 46 | சரஸ்வதி நகர் (சின்ன அய்யங்குளம்) | C |
| 219 | 46 | திருவெங்கப்பம் அவென்யூ | C |
| 220 | 46 | ரஹீம் சிட்டி | C |
| 221 | 46 | டைம் சிட்டி | C |
| 222 | 47 | ஸ்ரீராஜலட்சுமி நகர் | C |
| 223 | 47 | ஸ்ரீஸ்ரீஸ்ரீமகாபெரியவா மணி மண்டபம் பாடசாலை அவென்யூ | C |
| 224 | 47 | ஆதிசங்கரர் நகர் | C |
| 225 | 47 | ஜெயேந்திரர் நகர் | C |
| 226 | 47 | தனலட்சுமி நகர் | C |
| 227 | 47 | வி.ஐ.பி சிட்டி சாய் என்கிளேவ் | C |
| 228 | 47 | லட்சுமி வைகுந்தவள்ளி நகர் | C |
| 229 | 47 | முரளி நகர் | C |
| 230 | 47 | ரவி நகர் | C |
| 231 | 47 | குபேரன் நகர் | C |
| 232 | 47 | அங்காள பரமேஸ்வரி நகர் | C |
| 233 | 47 | லட்சுமி நகர் | C |
| 234 | 47 | பாரதி நகர் | C |
| 235 | 47 | சரஸ்வதி நகர் | C |
| 236 | 47 | சிப்காட் | C |
| 237 | 47 | குறிஞ்சி தெரு முல்லை நகர் | C |
| 238 | 47 | ஜெ.கே நகர் | C |
| 239 | 47 | துரைசாமி நகர் | C |
| 240 | 47 | கிருஷ்ணன் நகர் | C |
| 241 | 47 | திவ்யா நகர் | C |
| 242 | 47 | சண்முகா நகர் | C |
| 243 | 47 | கோபால் நகர் | C |
| 244 | 47 | தணிகைவேல் நகர் | C |
| 245 | 47 | புதுவசந்தம் நகர் | C |
| 246 | 47 | ஸ்ரீகிருஷ்ணவேணி நகர் | C |
| 247 | 47 | நித்தீஸ்வரி நகர் | C |
| 248 | 49 | முத்தமிழ் நகர் செல்லியம்மன் தெரு | C |
| 249 | 49 | காத்தவராயன் தெரு பாஞ்சாலை அம்பாள் நகர் | C |
| 250 | 49 | இராமானுஜம் சாலை | C |
| 251 | 49 | சாய் நகர் | C |
| 252 | 49 | கணபதி நகர் | C |
| 253 | 49 | ஜீவா நகர் | C |
| 254 | 49 | குமரகோட்டம் நகர் | C |

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | தற்பொழுது நிர்ணயம் செய்யப்படும் மண்டலம் |
|---|---|---|---|
| 255 | 49 | தனலட்சுமி சாலை | C |
| 256 | 49 | விவேகானந்தர் சாலை | C |
| 257 | 49 | கலைஞர் சாலை குறுக்கு தெரு | C |
| 258 | 49 | இந்திரா காந்தி சாலை | C |
| 259 | 49 | கங்கை அம்மன் சாலை | C |
| 260 | 49 | சுப்பிரமணி சாலை | C |
| 261 | 49 | ஸ்ரீ நகர் | C |
| 262 | 49 | இராமானுஜர் சாலை | C |
| 263 | 49 | கண்ணகி சாலை | C |
| 264 | 49 | பாரதியார் சாலை | C |
| 265 | 49 | வடிவேல் நகர் | C |
| 266 | 49 | தனலட்சுமி நகர் | C |
| 267 | 49 | ஹரி நகர் | C |
| 268 | 49 | பிருந்தாவனம் நகர் விரிவாக்கம் | C |
| 269 | 49 | சின்னையன் நகர் விரிவாக்கம் | C |
| 270 | 50 | தனபாக்கியம் நகர் | C |
| 271 | 50 | பாரதி நகர் | C |
| 272 | 50 | பாலமடை பைபாஸ்ரோடு | C |
| 273 | 50 | ராமசாமி நகர் | C |
| 274 | 50 | கீழ்களத்து மேட்டு தெரு விரிவு | C |
| 275 | 50 | குமரன் நகர் | C |
| 276 | 1 | ஒலிமுகமது பேட்டை வரதப்பன் தெரு பாலாஜி நகர் | C |
| 277 | 44 | ஸ்ரீ துளசி கார்டன் | C |
| 278 | 46 | தீபீகா கார்டன் | C |
| 279 | 46 | பச்சையம்மன் நகர் | C |
| 280 | 47 | லஷ்மி அவென்யூ | C |
| 281 | 25 | பொய்யாகுளம் | C |
| 282 | 26 | ஹரிஹந்த அவென்யூ | C |
| 283 | 26 | அங்காள பரமேஸ்வரி நகர் | C |
| 284 | 26 | சரஸ்வதி நகர் | C |
| 285 | 27 | விக்னேஷ் நகர் விரிவு | C |
| 286 | 27 | குமரன் நகர் | C |
| 287 | 27 | விஜய் நகர் | C |
| 288 | 27 | ஆண்டாள் திரு நகர் | C |
| 289 | 27 | மெராஜி தேசாய் நகர் | C |
| 290 | 27 | RA அனெ்யு | C |
| 291 | 27 | கம்போஸ்ட் யார்டு ரோடு | C |

**அலுவலகக் குறிப்பு :–**

மண்டல மதிப்பு நிர்ணயம் செய்தல் தொடர்பாக மாமன்றம் தீர்மானிக்கலாம்.

**(ந.க.எண்.2923/2022/அ1)**

**தீர்மான எண். 4 புதியதாக தோற்றுவிக்கப்பட்ட தெருக்களுக்கு மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**5.** அரசாணை என்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றின்படி இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஏற்கனவே குறைவாக / அதிகமாக மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தெருக்களின் மண்டல மதிப்பினை திருத்தி நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மண்டலம் | தற்பொழுது நிர்ணயம் செய்ய வேண்டிய மண்டலம் |
|---|---|---|---|---|
| 1 | 1 | ஒலிமுகமது பேட்டை ரோட்டு தெரு | C | B |
| 2 | 2 | ஏகாம்பரபுரம் தெரு | C | B |
| 3 | 3 | லிங்கப்பன் தெரு | C | B |
| 4 | 4 | வைத்தியர் தெரு | C | B |
| 5 | 9 | வைகுண்டபெருமாள் மாடவீதி | C | B |
| 6 | 10 | கொல்லாசத்திரம் | C | B |
| 7 | 13 | சாத்தான் குட்டை தெரு | C | B |
| 8 | 18 | ஒக்கப்பிறந்தான் குளம் தெரு | C | B |
| 9 | 19 | மாண்டுகண்ணிஸ்வரார் கோயில் தெரு | C | B |
| 10 | 20 | கச்சிமாட வீதி | C | B |
| 11 | 21 | மதங்கீஸ்வரர் கோயில் தெரு | C | B |
| 12 | 32 | வளத்தீஸ்வரன் கோயில் தெரு | C | B |
| 13 | 33 | ஜீயர் நாராயண பாளையம் தெரு | C | B |
| 14 | 33 | நாராயணபாளையம் தெரு | C | B |
| 15 | 35 | தும்பவனம் தெரு | C | B |
| 16 | 35 | A.K.T தெரு | C | B |
| 17 | 35 | கோட்ராம்பாளையம் தெரு | C | B |
| 18 | 37 | மேட்டுத் தெரு | C | B |
| 19 | 37 | சேஷாத்திரி பாளையம் ரோடு தெரு | C | B |
| 20 | 38 | சேர்மன் சாம்பசிவம் தெரு | C | B |
| 21 | 39 | முதலமைச்சர் சி.என் அண்ணாதுரை தெரு | C | B |
| 22 | 40 | சேதுராயர் தெரு | C | B |
| 23 | 41 | மிலிடெரி ரோடு | C | B |
| 24 | 41 | அண்ணாமலை நகர் | C | B |
| 25 | 45 | உத்திரமேரூர் சாலை | C | B |
| 26 | 50 | ரோடு தெரு செவிலி மேடு | C | B |
| 27 | 21 | சேக்குபேட்டை நடுத் தெரு | B | A |
| 28 | 49 | செந்தாமரை தெரு, பிருந்தாவனம் நகர் | A | C |

**அலுவலகக் குறிப்பு :–**

மண்டல மதிப்பு நிர்ணயம் செய்தல் தொடர்பாக மாமன்றம் தீர்மானிக்கலாம்.

(ந.க.எண்.2923/2022/அ1)

**தீர்மான எண். 5 ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மண்டல மதிப்பீட்டினையே தொடரவும் புதிய மண்டல மதிப்பை ஆய்வு செய்த பின்னர் முடிவு எடுக்க மாமன்றத்தில் முடிவு செய்யப்பட்டது.**

6. தமிழ்நாடு அரசு சட்ட மன்ற பேரவை 2017–18 ஆம் ஆண்டு கோரிக்கை எண். 26–ன் படியான அறிவிப்பு :–

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் எல்லை விரிவாக்கத்திற்கென காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த உள்ளாட்சி அமைப்புகளை இணைத்தல் குறித்து சட்டமன்ற பேரவையில் 03.07.2017 அன்று மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரம் மாநகராட்சியைச் சார்ந்த பின்வரும் வருவாய் கிராமங்களை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும (CMDA) எல்லையுடன் இணைத்திட மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | நெட்டேரி | 12 | நத்தப்பேட்டை |
| 2 | அச்சுக்கட்டு | 13 | அரப்பணஞ்சேரி |
| 3 | சாலபோகம் | 14 | திருக்காலிமேடு |
| 4 | தேனம்பாக்கம் | 15 | திருவீதிபள்ளம் |
| 5 | சின்னஜயங்குளம் | 16 | பெரியதோட்டம் |
| 6 | ஓரிக்கை | 17 | தாட்டித்தோப்பு |
| 7 | வேளிங்கப்பட்டரை | 18 | நசரத்பேட்டை |
| 8 | செவிலிமேடு | 19 | முல்லாபாளையம் |
| 9 | திருப்பருத்திகுன்றம் | 20 | பரமேஸ்வரநின்னகரம் |
| 10 | விஷ்ணுகாஞ்சி | 21 | உப்புக்குளம் |
| 11 | கோட்டைக்காவல் | | |

**அலுவலக குறிப்பு:–**

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம், சென்னை 600 008 அவர்களது நேர்முக கடித எண். C1/11127/2017 நாள். 07.09.2017 மற்றும் அரசு செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை – 09 அவர்களது கடித ந.க.எண். 15537/UD1/2017–3) நாள்.15.09.2017–ன்படி மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**(ந.க.எண்.2818/2022/எப்1)**

**தீர்மான எண். 6 ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**மாநகராட்சி அலுவலகம்,**
காஞ்சிபுரம்.
**நாள்.08.04.2022**

**(ஒம்) மூ. மகாலட்சுமி**
**மேயர்**
காஞ்சிபுரம் மாநகராட்சி.

// உண்மை நகல் //

இணை இயக்குநர் / ஆணையாளர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி.